محمد صلى الله عليه وسلم

وَمَآ أَرْسَلْنَٰكَ إِلَّا رَحْمَةً لِّلْعَٰلَمِينَ

(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம்
ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை.

அல்குர்ஆன் 21:107

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# நபி (ﷺ) அவர்களின் ஷஃபாஅத் கிடைக்கும் நற்காரியங்கள்

அல்கோபர் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# நபி (ﷺ) அவர்களின் ஷஃபாஅத் கிடைக்கும் நற்காரியங்கள்

1

## தூய்மையான உள்ளத்துடன் “லா இலாஹ இல்லல்லாஹ்” எனக் கூறியவர்

நான் “அல்லாஹ்வின் தூதரே! மறுமை நாளில் மக்களிலேயே தங்களின் பரிந்துரை மூலம் நற்பேறு பெறுகின்றவர் யார்?” என்று கேட்டேன்.

அதற்கு அவர்கள். “அபூஹுரைராவே! என்னைப் பற்றிய செய்திகள் மீது உமக்கிருக்கும் பேராவல் எனக்குத் தெரியும். ஆதலால், இந்தச் செய்தியைப் பற்றியும் உமக்கு முன்னர் வேறு யாரும் நிச்சயமாகக் கேட்கமாட்டார்கள் என்று நான் எண்ணியிருந்தேன்.

மறுமை நாளில் மக்கள் அனைவரிலும் என் பரிந்துரை மூலம் நற்பேறு பெறுகின்றவர் யாரெனில், உளப்பூர்வமாக தூய்மையான எண்ணத்துடன் "லா இலாஹ இல்லல்லாஹ்' (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை) என்று சொன்னாரே அவர்தான்” என்று கூறினார்கள்

**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 6570**

# நபி (ﷺ) அவர்களின் ஷஃபாஅத் கிடைக்கும் நற்காரியங்கள்

2-A

## பாங்கிற்குப் பின் பிரார்த்தனையை ஓதி வருபவர்

اللَّهُمَّ رَبَّ هَذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ، وَالصَّلاَةِ الْقَائِمَةِ آتِ مُحَمَّدًا الوَسِيلَةَ وَالْفَضِيلَةَ، وَابْعَثْهُ مَقَامًا مَحْمُودًا الَّذِي وَعَدْتَهُ

அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் தஃவதித் தாம்மத்தி,
வஸ்(ص)ஸலாத்தில் காயிம(த்)தி, ஆ(த்)தி
முஹம்மதனில் வசீலத்த, வல்ப(ف)ளீ(ض)லா.
வப்அஸ்(ث)ஹு மகாமன் மஹ்மூதனில்லதீ வஅத்தா

அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் புகாரி 614

# நபி (ﷺ) அவர்களின் ஷஃபாஅத் கிடைக்கும் நற்காரியங்கள்

2-B

## பாங்கிற்குப் பின் பிரார்த்தனையை ஓதி வருபவர்

இறைவா! இந்த முழுமையான அழைப்பிற்கும் நிலையான தொழுகைக்கும் உரியவனே! முஹம்மத் (ﷺ) அவர்களுக்கு (சொர்க்கத்தில்) உயர் பதவியையும் தனிச் சிறப்பையும் வழங்குவாயாக! அவர்களுக்கு நீ வாக்களித்துள்ள உன்னத இடத்திற்கு அவர்களை நீ அனுப்புவாயாக !

### சிறப்பு

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: யார் தொழுகை அறிவிப்பைக் கேட்(டு முடிக்)கும்போது, இறைவா! இந்த முழுமையான அழைப்பிற்கும் நிலையான தொழுகைக்கும் உரியவனே! முஹம்மத் (ﷺ) அவர்களுக்கு (சொர்க்கத்தில்) உயர் பதவியையும் தனிச் சிறப்பையும் வழங்குவாயாக! அவர்களுக்கு நீ வாக்களித்துள்ள புகழுக்குரிய இடத்தில் அவர்களை எழுப்புவாயாக!" என்று பிரார்த்திக்கிறாரோ, அவருக்கு மறுமை நாளில் என் பரிந்துரை கிடைக்கும்.

அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் புகாரி 614

# நபி (ﷺ) அவர்களின் ஷஃபாஅத் கிடைக்கும் நற்காரியங்கள்

3

## மதீனாவின் இடர்பாடுகளை சகித்துக் கொண்டு வாழ்பவர்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "மதீனாவின் இடர்பாடுகளைச் சகித்துக்கொண்டவருக்காக மறுமை நாளில் நான் பரிந்துரைப்பவனாக, அல்லது சான்று உரைப்பவனாக இருப்பேன்."

அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 2668

# நபி (ﷺ) அவர்களின் ஷஃபாஅத் கிடைக்கும் நற்காரியங்கள்

4

## மதீனாவில் மரணிப்பவர்

"எவருக்கு மதீனாவில் மரணிக்க முடியுமோ அவர் மதீனாவில் மரணிக்கட்டும், ஏனெனில் மதீனாவில் மரணித்தவருக்காக நான் பரிந்துரைப்பவனாக இருப்பேன்" என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள்,திர்மிதீ 9317